படுகிறது. அந்த சிறப்புத் தேர்ச்சியும் பயிற்சியும் கிடைக்கத்தான் டி.பி.எம். (டிப்ளமா இன் சைக்யாட்டிக் மெடிசின்) என்கிற சிறப்புப் பாடம் நடத்தப்பட வேண்டும் என்று விரும்பப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, இந்த மன நோய் மருத்துவ மனைகள் மாவட்ட ரீதியாக எந்த எந்த மாவட்டங்களில் இருக்கின்றன ? அவை எங்கெங்கே இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மனநோய் மருத்துவ மனை சென்னை நகரத்தில் பெரிய அளவில் இருக்கிறது. மாநிலம் முழுதுக்கும் அது பொருந்தும். தனி மருத்துவ மனைகள் இருக்கவேண்டும் என்பது ஒப்புக் கொள்ளப்படவில்லை. பெரிய மருத்துவ மனைகளில் மன நோய்க் கூறுகளை அறிந்த டாக்டர்கள் இருப்பதால், அவர்களை அகநோயாளிகளாக ஏற்றுக் கொள்ளாமல், புற நோயாளிகளாக வைத்து சிகிச்சை கொடுப்பதில் மாபெரும் வெற்றி கிடைத்திருக்கிறது என்பதை உலகம் ஒப்புக்கொள்கிறது. புற நோயாளிகளுக்கு மாவட்டத் தலைமை மருத்துவ மனை அளவில் சிகிச்சை அளிக்கப்படும்.

Jaundice cases in Government Hospitals in Madras

* 503 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the total number of Jaundice cases treated both as in-patients and as out-patients in each of the Government hospitals in the City of Madras, between January to April this year, month-war ; and

(*b*) the number of fatalities in Jaundice cases in each of the Government hospitals in the City of Madras, month-war from January to April 1971?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மன்றத்தின் முன் விவர அறிக்கை* யொன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்பொழுது இந்தக் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டவர்களில், நான்கு மாதகாலத்தில் 1,487 பேர்கள் சிகிச்சை பெற்றவர்கள் என்றும், 35 பேர்கள் காலமானவர்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நான்கு மாத காலத்தில் இவ்வளவு அதிகமாக நோய் பரவியதற்குக் காரணம் என்ன என்று அரசு ஆராய்ச்சி செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மஞ்சள் காமாலை காண்கிற தொடக்க நிலையிலேயே சிகிச்சைக்கு வந்து, சிகிச்சை பெற்றிருந்தால், பூரண குணம் அடைந்திருக்கலாம். ஆனால், நோய் முற்றிய பின்னால் சிகிச்சைக்கு வந்தால், தாங்கும் சக்தி மிகுதியாக இராததால், நோயைத்தாங்கும் 'ப்ரோட்டீன்' சத்துக்கள் அடியோடு குறைந்து, இதற்குப் பின்னால் மருந்துகளை ஏற்றுக்

* 312–316-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கொண்டு உடல் நலத்தைக் காக்கும் சக்தி பெறுவதில்லை. ஆனாலும், இந்த அளவுக்கு காமாலை நோயைக் கட்டுப்படுத்தியிருப்பதற்கு நாம் இந்தத் துறையில் பணியாற்றியவர்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த மஞ்சள் காமாலை வியாதியை ஸ்வஸ்தப்படுத்த அலோபதி முறையில் நல்ல மருந்துகள் இல்லை என்றும், ஆயுர்வேத முறையில் தழைகளைக் கொண்டு அதன்மூலம் சிகிச்சை செய்கிறார்கள் என்றும் சொல்லுகிறார்களே. ஆகவே, ஆயுர்வேத முறையில் ஸ்வஸ்தமாக்க ஊக்கம் அளிக்கப்படுமா, அந்த யோசனையை அமைச்சர் செயல்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படி ஆயுர்வேதம், சித்த முறைகளில் உபயோகிப்பதில், கரிசலாங்கண்ணி என்கிற மூலிகை மூலம் மருத்துவம் செய்யப்படுகிறது. அலபதி முறையிலும், இந்தக் கரிசலாங்கண்ணி மூலிகையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மருந்துகளையோ, சாரையோ மருந்துக்காக வழங்கப்படுகிறது என்பது கடந்த 5, 6 ஆண்டுக்காலமாகச் செல்வாக்கு பெற்றிருக்கிறது. ஆனாலும், குறிப்பிட்ட கட்டங்களில் வேறு சில மருந்துகளும் தேவைப்படுகின்றன. அந்த மருந்துகளைக் கொடுத்து, தாங்கும் சக்தியை உண்டாக்கி, அதன்மூலம் சிகிச்சை செய்யப்படுகிறது.

பழைய ஜெயங்கொண்டானுக்கு மருந்தகம்

*504 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், பழைய ஜெயங்கொண்டத்தில் ஒன்றியத்தின் மூலம் மருந்தகம் துவக்க எப்போது தீர்மானிக்கப்பட்டது?

(இ) இதுவரை மருந்தகம் துவக்கப்படாததற்குக் காரணம் யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 1969-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் உத்திரவிடப்பட்டது.

(இ) ஒன்றியத்தின் நிதி நிலைப் பற்றாக்குறையின் காரணமாக மருந்தகம் துவக்கப்படவில்லை.

Poultry Development

*505 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any new scheme for Poultry Development has been introduced in Chingleput District; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள படப்பை, சித்தலப்பாக்கம், பஞ்சாயத்து ஒன்றிப்புகளில், கோழி வளர்ப்போர் சங்கம் அமைத்து வர்த்தக வங்கிகள்மூலம் அவர்களுக்கு உதவியளிக்கும் திட்டம் ஒன்றினை அரசு இவ்வருடம் செயல்படுத்த ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. படப்பையில் கிராம வளர்ச்சி முகாம் ஒன்று நடத்தப்பட்டு, அங்கு கோழி வளர்ப்போருக்கு மானிய உதவியோடு கோழிகள் விற்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS